RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt23110

OPEN ACCESS

# பெருங்கடுங்கோவின் பாடல்கள் காட்டும் பண்பாட்டுப் பதிவுகள்

**சு. செல்வக்குமார்** [அ, *]

[அ] தமிழ் இலக்கியத்துறை, நல்ல முத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி-642001, தமிழ்நாடு, இந்தியா

# Cultural Records shown by the songs of Perunkadungo

**S. Selvakumar** [a, *]

[a] Department of Tamil literature, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi-642001, Tamil Nadu, India

* Corresponding Author: vinnselvan@gmail.com

Received: 01-07-2022
Revised: 25-09-2022
Accepted: 06-10-2022
Published: 01-12-2022

**ABSTRACT**

Culture is capable of giving humanity greatness, welfare, and specific identities. Cultural elements take the lead in the construction of individual superiority and social improvements. Literature plays a significant role in the factors that reveal the cultural environment of a society. In this way, the Sangam literary texts are of great help in understanding the cultural milieu of the Sangam era. The great poets of the Sangam age recorded in their poems the cultural aspects of the people who lived at that time. The cultures of the Sangam era can be called the Thinai culture and the Ainthinai culture. Perunkadungo is one of the great poets of the Sangam age. He belonged to Kongu Nadu, one of the ancient kingdoms of Tamil Nadu. He is good at singing Paalai Thinai songs. Therefore, he is called Perunkadugo, who sang paalai. He has revealed the cultural aspects of the period through the Agathinai people in his songs. The purpose of this paper is to project them.

**Keywords:** Culture, Sangam, Paalai Thini. Kongu Region, Thnaippanpadu, Aram

## முன்னுரை

பண்பாடு என்பது மனிதகுலத்திற்கு மேன்மைகளையும் நலங்களையும் குறிப்பிட்ட அடையாளங்களையும் தரவல்லதாகும். தனிமனித உயர்வையும் சமுதாய மேம்பாடுகளையும் கட்டமைப்பதில் பண்பாட்டுக்கூறுகள் முன்நிற்கின்றன. ஒரு சமுதாயத்தின். பண்பாட்டுச்சூழலை. வெளிப்படுத்தும் காரணிகளுள் இலக்கியங்கள் குறிப்பிடத்தக்க இடம்வகிக்கின்றன. அவ்வகையில் சங்ககாலப்பண்பாட்டுச் சூழலை அறியச் சங்கஇலக்கிய நூல்கள் பெரிதும் துணைநிற்கின்றன. சங்ககாலப்புலவர் பெருமக்கள் தாங்கள் எழுதிய பாடல்களில் அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் பண்பாட்டுக் கூறுகளைப் பதிவாக்கியுள்ளனர். சங்ககாலப் பண்பாட்டைத் திணைப்பண்பாடு என்றும் ஐந்திணைப்பண்பாடு என்றும் அழைக்கலாம் (Perumal, 2014). சங்ககாலப் புலவர் பெருமக்களுள் ஒருவராக விளங்குபவர் பெருங்கடுங்கோ. இவர் தமிழகத்தின் பண்டைய நாட்டுப்பிரிவுகளில் ஒன்றாகிய கொங்கு நாட்டைச்சேர்ந்தவர். இவர் பாலைத்திணைப் பாடல்களைப் பாடுவதில் சிறந்தவர். ஆகையால் பாலை பாடிய பெருங்கடுங்கோ என அழைக்கப்படுகின்றார். அவர் தன்னுடைய பாடல்களில் இடம்பெறும் அகத்திணைமாந்தர்கள் வழி அக்காலத்திய பண்பாட்டுக்கூறுகளை வெளிப்படுத்தியுள்ளார். அவற்றை எடுத்துரைப்பது இவ்வாய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பண்பாடு- சொல் விளக்கம்

பண்பாடு என்ற சொல்லுக்குப் பல விளக்கங்கள் உண்டு. "ஆங்கிலத்தில் Culture என்று சுட்டுவதற்கு நேராகவே “பண்பாடு” என்பது ஆளப்படுகிறது. இச்சொல்லை இப்பொருளில் முதன்முதலில் ஆண்ட பெருமை அறிஞர் டி. கே. சிதம்பரநாத முதலியார்க்கு உரியது என்பர். பண்பாடு என்னும் சொல்லிலிருந்து அமைத்துக் கொள்ளப்பட்டது இச்சொல்லாகும். பயிரிடுவதற்கு ஏற்றவாறு நன்கு செய்யப்பட்ட நிலம் நன்செய் நிலமாகும். அதுவே பண்படுத்தப்பட்ட நிலம் என்றும் சொல்லப்படும். அந்நிலமே நற்பொருள்கள் விளைய இடமாக அமையும் சிறப்பினதாகும். பக்குவப்பட்ட மனிதனையும் பண்பட்ட மனிதன் என்போம். பண்பட்ட உள்ளம் உடையோர் பண்பாடு கொண்டவர்கள். மக்களின் பழைய வரலாற்றில் அவர்கள் ஏற்றுக்கொண்ட கருவிகள், சமூகப் பழக்கவழக்கம், நம்பிக்கை, சமயம் முதலியவற்றைப் பண்பாடு என்ற சொல்லால் குறிக்கின்றனர். மக்களின் அறிவு நலம், ஒழுக்க உயர்வு, கொள்கை நலம், பண்பு நலம், வாழ்கை நலம் ஆகியவை மேன்மேலும் திருந்திய நிலையே பண்பாடு எனலாம்" (Dakshinamurthy, 2019).

"ஓர் இனத்தின் பண்பாடு அதன் இலக்கியம் நடை, உடை, மொழி, கலைகள், குறிக்கோள், சமயக்கொள்கை, சமயப்பொறை. அரசியல் கொள்கை, அரசியல் வரலாறு, சமுதாய நிலை, பெண்களின் நிலை, அறிவியற்சிறப்பு, கல்விநிலையங்கள் மூலமும் விளக்கமுறுகின்றது". சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகிற உளப்பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கிறோம்” எவ்வாறாயினும் மனித வாழ்க்கையை மேம்படுத்தவல்ல தன்மை கொண்டன யாவும் பண்பாட்டுக் கூறுகளாக வடிவம் கொள்கின்றன (Dakshinamurthy, 2019).

## அறம் போற்றும் பண்பு

மனிதர்கள் தங்கள் வாழ்வில் வாழும் சூழலுக்கு ஏற்ற அறங்களைக் கடைப்பிடித்து வாழும்போதுதான் அந்தச்சமுதாயம் அமைதியுடனும் சிறப்புடனும் வளரமுடியும். அவ்வாறு வாழும்போதுதான் அது பண்பாடுடைய சமுதாயமாக விளங்கமுடியும். அதனால்தான் மக்கள் அவர்கள் வாழும் சமுதாயத்தின் சூழலுக்கு ஏற்ற அறங்களைப் பின்பற்ற வலியுறுத்தப்படுகின்றனர். சங்ககாலச் சமூக அமைப்பு பல அறங்களைப் பின்பற்றியமைக்குப் பெருங்கடுங்கோவின் பின்வரும் பாடலடிகள் சான்றுகளாகின்றன.

“அறன் இன்றி அயல் தூற்றும் அம்மலை நாணியும்”

“அரிது ஆய அறன் எய்தி அருளியோர்க்கு அளித்தலும்”

“அறன் ஓடி விலகின்று அவர் வினைத் திறத்தே”

“அன்பு அறம் மாறி யாம் உள்ளம் துறந்தவன் பண்பும் அறிவீரோ?”

“ஈதலில் குறை காட்டாது, அறன் அறிந்து ஒழுகிய

தீது இலான் செல்வம்” (Viswanathan, 2014)

அறன் கடைப்படா வாழ்க்கையும்”

என்ற அடிகள் அறத்தின் மீது புலவரும் அக்காலச் சமுதாயமும் கொண்டிருந்த மதிப்பை எடுத்துக்காட்டுகின்றன (Jeyabal, 2014).

## விருந்தோம்பல்பண்பு

விருந்தினர்களைப் பேணுதல், விருந்துபடைத்தல் ஆகிய குணங்களைப் பண்டைத்தமிழர் பெரிதும் மதித்து நடந்துள்ளனர். இதற்குச் சான்றாகப் பெருங்கடுங்கோவின் பாடல்கள் அமைகின்றன. தலைவியைப் பிரிந்து செல்லும் தலைவனிடம் தோழி பின்வருமாறு கூறுகிறாள்.

“இச்செலவு

ஒழிதல் வேண்டுவல், சூழின் பழிஇன்று

மன்னவன் புறந்தர வருவிருந்து ஓம்பி

தன் நகர் விழையக் கூடின்

இன்உறல் வியன் மார்ப!”

என்ற அடிகள் இல்லம் வரும் விருந்தினரைப் பாதுகாத்தலும் அவர்களுக்கு விருந்து படைத்துத் தலைவியுடன் சேர்ந்து இருத்தலுமே சிறந்தது என்பதை உணர்த்துகின்றன (Viswanathan, 2014). இன்னொரு பாடலில் தலைவன் தலைவியைக் காண வரும் செய்தியைச் சொல்லும் வகையில் வந்த இளவேனில் பருவத்தைப் பார்த்துத் தோழி,

“தூது வந்தன்றே, தோழி!

துயர் அறு கிளவியொடு அயர் தீகம் விருந்தே!”

என்று இளவேனில் பருவத்திற்கு விருந்துசெய்ய அழைக்கிறாள். விருந்தினரை மதித்தலும் அவர்களை விருந்தோம்பிக் காத்தலும் பண்டைத் தமிழரின் பண்பாடாக அமைவதைக் காணமுடிகிறது (Viswanathan, 2014).

## ஈகைப்பண்பு

ஒருவன் இந்த பூமியில் புகழ்பட வாழ்தலுக்கு வழியாக அமைவது இல்லாதோர்க்குத் தேவையான உதவிகளைச் செய்தல் ஆகும் என்று வள்ளுவம் பேசுகிறது. இத்தகைய ஈகைப்பண்பு ஒருவனுக்கு நல்ல மதிப்பையும் பெற்றுத்தரவல்லது ஆகும் (Varatharasanar, 2014). வறியவருக்குக் கொடுத்து உதவும் பண்பு உயர்ந்தது என்பதையும் அவ்வாறு கொடுத்து உதவாமல் வாழ்தல் இழிவு என்பதையும் உணர்த்தப் பெருங்கடுங்கோ

“தொலைவு ஆகி இறந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு”

“இல்லென இறந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு”

“இடன் இன்றி இறந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு”

என ஒருபாடலில் மூன்று முறை கூறியமை நோக்கத்தக்கது. ஈகைப் பண்பு மனிதர்களுக்கு இன்றியமையாத ஒன்று என்பதைப் பண்டைத்தமிழர் உணர்ந்திருந்தமை இங்குக் குறிப்பிடத்தக்கது (Viswanathan, 2014).

## தலைவனின் பண்புகள்

சங்ககாலப் பாடல்களில் தலைவர்களாக வரக்கூடியவர்களின் பண்புகளிலிருந்தும் இயல்புகளிலிருந்தும் பல பண்பாட்டுக் கூறுகளைக் காணமுடியும். பெருங்கடுங்கோவின் பாடல்களில் இடம்பெறும் தலைவனின் பண்புகளிலிருந்தும் இயல்புகளிலிருந்தும் அக்காலச் சமூகத்தில் வாழ்ந்த மனித இயல்புகளையும் பண்புகளையும் அறியமுடிகிறது. அகப்பாடல்களில் வரும் தலைவர்களின் செயல்பாடுகள் போருக்குச் செல்லுதல், பொருளீட்டச்செல்லுதல், பரத்தையரிடம் செல்லுதல், காமக்கிழத்தியரிடம் செல்லுதல், மீண்டும் தலைவியிடம் வருதல் என்றவாறு அமைகின்றன. பிற பெண்களிடம் சென்றமைக்காகத் தலைவி தலைவனிடம் ஊடல்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. அவ்வூடலைத் தணிக்கத் தோழி, பாணன் போன்றோர் முயல்கின்றனர்.

பொருள் தேடிச்செல்லும் தலைவனுடன் தலைவி தானும் உடன் வருகிறேன் எனச்சொல்லியபோது, அவள் தன்னுடன் வந்தால் அவளுடைய மென்மையான பாதங்கள் வழியிலுள்ள கற்கள்பட்டுக் காயமடைந்து வருந்துவாள் என்றும் காட்டுப்பாதையில் சிங்கத்தின் குரல் கேட்டு

அச்சம்கொள்வாள் என்றும் வெம்மையான காற்று அவள் மேனியில் படுவதனால் அவளின் அழகிழக்கும் என்றும் சொல்லி அவளை உடன்வரத்தடுக்கிறான். இவ்வாறு பெண்நலம் பேணும் பண்புடையவனாகத் தலைவன் விளங்குகிறான் (Viswanathan, 2014).

தலைவன் தலைவியை உடனழைத்துச் சென்ற காலத்தில் தன்னை எதிர்த்த ஆறலைக் கள்வர்களை வென்றுவிட்டு அவர்களைக் கொல்லாது விட்ட அருள்தன்மை அவனுக்குண்டு. அதே வேளையில் தலைவியின் உறவினர் காட்டுவழியில் இவர்களைத் தேடி வந்தபோது அவர்களைத் தன் உறவாகக் கருதி அவர்களிடம் சண்டையிடாது ஒளிந்து கொள்கின்றவனாக உள்ளான். இத்தகைய நனிநாகரிகம் கொண்டவனாகத் தலைவன் இருந்ததைப் பெருங்கடுங்கோ தன் பாடலில் காட்டியுள்ளார் (Balasubramanian, 2014).

களவுக் காலத்தில் தலைவன் காம மிகுதியாகும் போது உள்ளப் புணர்ச்சி அடைவதற்குத் தடையாக இருந்த தன் நாணத்தைக் கைவிட்டுக் காதல் நோய்க்கு மருந்தாக இருக்கும் மடப்பம் உடைய தலைவியோடு நடப்பவனாகத் தலைவன் இருந்துள்ளான். (கு.வெ. பாலசுப்பிரமணியன்,2014) “வினை செய்தல் ஆடவர்க்கு உயிர் போன்றது. ஒளி பொருந்திய நெற்றியை உடைய இல்லின்கண் உறையும் மகளிர்க்கு அவர்தம் கணவர் உயிர் போன்றவர்” என்று தலைவன் எண்ணுபவன் என்பதைப் பெருங்கடுங்கோ,

“வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்

மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர்”

என்ற அடிகளில் கூறி இருக்கின்றமை அக்காலச் சமுதாயத்தில் குடும்பத் தலைவர்கள், தலைவியரின் இயல்பையும் பண்பையும் எடுத்துக்காட்டுகிறது. தன்னுடைய மூதாதையர் தேடிவைத்த, தன்னிடம் உள்ள செல்வத்தைச் சிதைப்பவரை உயிர் உள்ளவர் எனக் கருத மாட்டார்கள் (Nagarajan, 2014). அப்படி வாழ்வோர் விரைவில் வறுமையுற்று, இரந்து வாழும் இழிவு நிலைக்கு ஆளாகநேரிடும் என்பதை உணர்ந்தவன் தலைவன். எனவே, அவன் பொருள் தேடிச் செல்கிறான் என்பதை,

“உள்ளது சிதைப்போர் உளர் எனப்படார்

இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு எனச்

சொல்லிய வன்மை தெளியக் காட்டிச்

சென்றனர்”

என்ற பாடலடிகளில் பெருங்கடுங்கோ எடுத்துக்காட்டியுள்ளார் (Nagarajan, 2014).

அக்காலத்தில் தலைவன் தலைவியின் மிகுந்த அன்பைப் பரிந்துகொண்டு அவளுடன் அன்பு பாராட்டி வாழ்பவனாக அகப்பாடல்களில் காட்டப்படுவது உண்டு. அதேவேளையில் அவளைப் பிரிந்து பிற பெண்களோடு (காமக்கிழத்தியர், பரத்தையர் ஆகிய பெண்களோடும்) சிலகாலம் வாழும் இயல்புடையவன் என்பதைப் பல சங்கப்பாடல்கள் வழி அறியமுடிகிறது. பெருங்கடுங்கோ இந்தப் பழக்கங்களையுடைய தலைவர் இயல்புகளைத் தன்னுடைய பாடல்களில் பல இடங்களில் பதிவு செய்துள்ளார்.

“மயில் இயலற் மரு உண்டு, மறந்து அமைகுவான் கண்ணே விறல்

இழையவரோடு விளையாடுவான் மன்னோ

மான் நோக்கினைவரோடு மறந்து அமைகுவான் மன்னோ”

தலைவன் குடும்பத் தலைவியைத் தவிர்த்துவிட்டு ஒரே ஊரில் இருக்கும் பரத்தையருடன் வாழும் இயல்பை நினைத்துத் தலைவி வருந்துவதாக அமைவன இப்பாடலடிகள் ஆகும். அக்கால இல்லற வாழ்க்கையின் இயல்பையும் சமுதாயத்தின் நிலைப்பாட்டையும் காட்டுவனவாக இவ்விலக்கியச் சான்றுகள் அமைகின்றன (Viswanathan, 2014).

## அந்தணர்களின் பண்புகள்

அக்காலச்சமுதாயத்தில் வாழ்ந்த அந்தணர்களின் ஒழுக்கங்கள். செயல்கள் வழியும் சில பண்பாட்டுக்கூறுகளைக் காணமுடியும். அந்தணர்கள் என்பவர்கள் எப்படிப்பட்டவர்கள்? அவர்களின் மனப்பாங்குகள் எத்தகையன? என்பதைப் பெருங்கடுங்கோ தன் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். எறித்தலைச் செய்கின்ற ஞாயிற்றின் கதிர்களைத் தாங்குவதற்கு ஏந்திய குடையின் நிழலில், உறியிலே வைத்த கமண்டலத்தையும் பெருமை சான்ற முக்கோலையும் முறைப்படத் தோளிலே வைத்து, மெய்ப்பொருளைத் தவிர வேறொன்றையும் கருதாத நெஞ்சம் உடையவர்களாகவும் ஐம்பொறிகளும் அவர்களுக்கு ஏவல் செய்யும் வகையில் உறுதியான கொள்கை உடையவர்களாகவும் அவர்களுக்கே உரித்தான ஒழுக்கங்களைக் கொண்டவர்களாகவும் விளங்கியுள்ளனர் என்பதைப் பின்வரும் பாடல் அடிகளில் சுட்டுகிறார் பெருங்கடுங்கோ.

"எறித்தரு கதிர் தாங்கி ஏந்திய குடை நீழல்

உறித் தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்

நெறிப்பட சுவல் அசைஇ வேறு ஓரா நெஞ்சத்துக்

குறிப்பு ஏவல் செயல் மாலைக் கொளைநடை அந்தணீர்!

வெவ்இடைச் செலல் மாலை ஒழுக்கத்தீர்!"

மேலும், கற்றிந்த அந்தணர்கள் கடவுளுக்கு வேள்விகள் நடத்தியுள்ளனர் என்பதை (Viswanathan, 2014),

"கேள்வி அந்தணர் கடவும்

வேள்வி ஆவியின் உயிர்க்கும் என் நெஞ்சே!"

என்ற அடிகள் உறுதிசெய்கின்றன (Viswanathan, 2014).

## மகளிர்இயல்புகள்

பெருங்கடுங்கோவின் பாடல்களில் இடம்பெறும் பெண்கள் வழியும் பண்பாட்டுக்கூறுகளை இனங்காணமுடியும். பெருங்கடுங்கோவின் பாடல்களில் தலைவியராக வரும் பெண்கள் மென்மைத் தன்மை கொண்டவராகக் காட்டப்படுகின்றனர்.

"நீயே, பாடல் சான்ற பழி தபு சீறடி

அல்கு பெரு நலத்து, அமர்த்த கண்ணை"

பல்வேறு அணிகலன்களை அணிபவர்களாகவும் பெண்கள் காட்டப்படுகின்றனர் (Balasubramanian, 2014).

"மலர் தலைக் காரான் தண்ணடை

ஒண்தொடி மகளிர் இழை அணி கூட்டும்"

பாதிரிப் பூவினைத் தெருக்கள்தோறும் விலை கூறிச்செல்லுதல் மகளிரின் இயல்பாக இருந்துள்ளமையை (Balasubramanian, 2014),

"துய்த் தலைப் பாதிரி

வால் இதழ் அலரி வண்டு பட ஏந்தி

புதுமலர் தெருவு தொரு நுவலும்

நொது மலாட்டிக்கு என் நெஞ்சே! "

என்ற அடிகள் எடுத்துரைக்கின்றன (Balasubramanian, 2014). தலைவன் பொருள் தேடச் சென்ற பிறகு அவன் திரும்ப வரும்வரை தலைவி காத்து நிற்கும் தன்மையைக் கொண்டிருந்தாள் என்பதை,

"கடிமனை காத்து வல்லுவள் கொல்லோ"

என்ற அடியால் உணரலாம். தலைவனைப் பிரிந்து வாழ்ந்த லை விரும்பாதவர்களாக இல்லற மகளிர் விளங்கியதைப் பெருங்கடுங்கோவின் பாடல்கள் காட்டி நிற்கின்றன (Balasubramanian, 2014).

"யாம் உயிர்வாழும் மதுகை இலேமாயின்

தொய்யில் துறந்தார் அவர், என, தம் வயின்

நொய்யார் நுவலும் பழி நிற்ப, தம்மோடு

போயின்று, சொல், என் உயிர்"

என்றவாறு தலைவனின் பிரிவைத் தாங்காத தலைவியின் துயரத்தை இங்குக் காட்டுகிறார் பெருங்கடுங்கோ (Balasubramanian, 2014). பரத்தையர் என்ற பெண்களையும் பெருங்கடுங்கோ தன் பாடல்கள் பலவற்றில் காட்டியுள்ளார். இவர்கள் தலைவனிடம் இன்ப நுகர்ச்சிக் காகவே கூடுகின்றவர்களாகக் காட்டப்படுகின்றனர்.

தான் விரும்பிய தலைவனுடன் தலைவி சந்திப்பதற்குத் தடை செய்பவர்களாக, அவனுடன் தலைவி உடன்போக்குச் செல்லுதலை (திருமணம் செய்துகொள்ளப் பெற்றோர் அனுமதியின்றி ஓடிப்போதல்) விரும்பாதவர்களாக, வருத்தம் கொள்பவர்களாக செவிலி, நற்றாய் ஆகிய பெண்கள் காட்டப்படுகின்றனர். காரணம், தலைவி சரியான துணைவனைத் தேர்ந்தெடுக்காமல் போய்விடுவாளோ? என்ற அச்சமே எனக்கருத இடமுண்டு. ஆனால், தோழி என்பவள் தலைவன், தலைவியின் காதலை மதித்து அவர்களைச் சேர்த்துவைக்கும் இயல்புடையவளாகக் காட்டப்படுகிறாள்.

## சிறந்த தன்மைகள்

ஒரு சமுதாயத்தில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க தன்மைகளும் திறமைகளும் கொண்டவர்கள் எல்லாக் காலத்திலும் வாழ்வதுண்டு. சங்க காலத்திலும் அத்தகையோர் இருந்துள்ளனர் என்பதற்குப் பெருங்கடுங்கோவின் பின்வரும் அடிகள் சான்று.

"ஆன்றவர் அடக்கம் போல

வல்லவர் யாழ் போல

நல்லவர் நுடக்கம் போல

உணர்ந்தவர் ஈகை போல

புணர்ந்தவர் முயக்கம் போல"

அறிவால் சிறந்த சான்றோரின் அடக்கத்தையும் யாழினை மீட்டும் திறன் படைத்தோர் தன்மையையும் நல்ல மகளிர் நடிக்கும் கூத்தின் இயல்பையும் பொருளின் நிலையாமையை உணர்ந்தவரின் ஈகைச்சிறப்பையும் கூடியவரின் முயக்கத் தன்மையையும் உவமைகளாகக் காட்டும் பெருங்கடுங்கோவின் மேற்குறித்த பாடலடிகள் அத்தகையோர் அக்காலச் சமுதாயத்தில் வாழ்ந்துள்ளனர் என்பதையும் அத்தகையோர் வாழும் நாடுகள் சிறப்புப் பெறுவதோடு நல்லதோர் பண்பாட்டுத் தன்மையோடும் விளங்கும் என்பதும் தெளிவாகிறது (Viswanathan, 2014).

## மன்னர் செயல்கள்

அக்காலத்தில் தமிழ் நிலப்பகுதிகளை ஆட்சிசெய்த மன்னர்கள் வழியும் பண்பாடுகளைப் பெறமுடியும். போர்த்தொழில் மிக்க அரசன் பகை நாட்டுக்குச் சென்று, படையுடன் தங்கி அந்த நாட்டை

வென்ற பின்பு, அங்குள்ள ஊர்களையும் விளைநிலங்களையும் தீக்கிரையாக்கும் பழக்கம் இருந்துள்ளதை,

"செரு மிகு சின வேந்தன் சிவந்து இறுத்த புலம் போல

எரிமேய்ந்த கரி வறல்வாய், புகல்வு காணாவாய்"

என்ற அடிகள் எடுத்துக் காட்டுகின்றன. முறைதவறி ஆளும் அரசர்களும் இருந்துள்ளனர் என்பதற்கு (Viswanathan, 2014),

"முறை தளர்ந்த மன்னவன் கீழ்க் குடி போல கலங்குபு" (Viswanathan, 2014)

மன்னர்கள் படைநடத்திச் சென்று பகைவனை வென்று திரும்பும்போது தலைநகரில் வெற்றிக்கொடிகட்டிக் கொண்டாடியுள்ளனர் என்பதை,

"மீளி வேல் தானையர் புகு தந்தார்

நீள் உயர் கூடல் நெடுங்கொடி எழவே"

என்ற அடிகள் வழி காணமுடிகிறது (Viswanathan, 2014).

"பேதையோன் வினை வாங்க, பீடு இலா அரசன் நாட்டு

ஏதிலான் படை போல"

பகையரசர் நாட்டிலே சென்று யாவற்றையும் கொள்ளையிடல் குறித்த செய்திகளும் இடம்பெறுகின்றன. இவற்றைச் சிறந்த செயல்கள் என இக்காலத்தில் கூற இயலாது (Balasubramanian, 2014).

## உலக இயல்புகள்

சில நடைமுறைகள் சில மக்களின் இயல்புகளாக அமைந்து விடுகின்றன. அவை, உலக இயல்புகள் எனக் கருதப்படும் அளவிற்கு அடையாளம் பெற்றுவிடுகின்றன. அத்தகைய உலக இயல்புகள் பற்றியும் பெருங்கடுங்கோ தன் பாடல்களில் பதிவுசெய்துள்ளார். இச்செய்திகள் சங்ககால மக்களின் பண்பாட்டிற்கு எதிராக இருந்த மக்களைப் படம் பிடிப்பனவாகும்.

"உன்கடன் வழிமொழிந்து இரக்குங்கால் முகனும், தாம்

கொண்டது கொடுக்கும் கால் முகனும் வேறாகுதல்

பண்டும் இவ் உலகத்து இயற்கை"

அக்காலத்தில் ஒருவன் செல்வம் உடையவராக இருக்கும்போது அவரோடு நீங்காது இருந்து அவருடைய செல்வத்தை நுகர்ந்து விட்டு அவர் வறுமையுறும்போது அவருக்கு உதவாமல் நீங்கிவிடும் உணர்வு இல்லாத இயல்புடையோரும் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை பெருங்கடுங்கோவின் (Viswanathan, 2014),

"செல்வத்துள் சேர்ந்தவர் வளம் உண்டு, மற்று அவர்

ஒல்கத்து நல்கிலா உணர்விலார் தொடர்புபோல்"

என்ற அடிகள் உணர்த்துகின்றன (Viswanathan, 2014). மேலும். ஒருவரோடு இருக்கும்போது அவரைப் புகழ்ந்தும் வாழ்த்தியும் பேசிவிட்டு, அவரை விட்டுச்சென்ற பிறகு அவர்மீதான பழிகளைப் பலரும் அறியப்பேசும் புறங்கூறும் மனிதர்களும் ஒருவரிடம் மனம் பொருந்தி நட்பாக இருந்த காலத்தில் அவர் கூறிய மறைவான செய்திகளைக் கேட்டுவிட்டு, அவரை விட்டுப்பிரிந்த காலத்தில் அந்த மறைவான செய்திகளைப் பலருக்கும் தெரியப்படுத்தும் பெருமையற்ற மனிதர்களும் அக்காலத்தில் இருந்துள்ளதையும் பெருங்கடுங்கோ கூறியுள்ளார். சங்ககால காலத்திலும் பண்பாட்டிற்கு

எதிரான இயல்புகளைக் கொண்ட மனிதர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதை இவ்வடிகள் வாயிலாக உணரலாம் .

## பாலை நிலவமைப்பும் கள்வர், மறவர் செயல்களும்

சங்க இலக்கியப் பாடல்கள் பெரும்பாலும் நிலத்தைப் பின்புலமாக வைத்தே கூற வந்ததைக் கூறும் இயல்புடையன. அவ்வகையில் பாலை நிலத்தை பின்புலமாகக் கொண்டு பெருங்கடுங்கோ பல பதிவுகளைக் காட்டுகிறார். பாலை நிலம் என்பது வறண்ட தன்மை உடையதாகவே பாலைத் திணைப் பாடல்களில் காட்டப்படுகின்றது. வெயில் கொளுத்தும் தன்மை, குடிப்பதற்குக் கூட நீரின்றி வாடும் உயிரினங்கள், வாடிக் கிடக்கும் செடி கொடிகள், மரங்கள், அந்நிலத்தில் வாழும் மறவர்களும் கள்வர்களும் அந்நிலப்பகுதியில் செல்வோரைக் கொள்ளையடிப்பதும் கொலை செய்வதுமான அவருடைய செயல்கள் ஆகிய காட்சிகள் பாலைத் திணைப் பாடல்களில் திரும்பத் திரும்பப் பேசப்படுகின்றன அல்லது வர்ணிக்கப்படுகின்றன. பெருங்கடுங்கோவின் பாலைப்பாடல்கள் படிப்போரை அந்த இடத்துக்குக் கொண்டு சென்று பாலைநிலக் காட்சியை உணரவைப்பனவாக அமைகின்றன.

“மரையா மரல்கவர மாரி வறப்ப

வரை ஓங்கு அருஞ்சுரத்து ஆர் இடைச் செல்வோர்

சுரை அம்பு மூழ்கச் சுருங்கி புரையோர் தம்

உள்நீர் வறப்பப் புலர்வாடு நாவிற்கு

தண்ணீர் பெறாஅத் தடுமாற்று அருந்துயரம்

கண்ணீர் நனைக்கும் கடுமைய காடு”

எனவரும் பாடலடிகள் பாலைநில இயல்புகளைக் கண்முன் கொண்டு வருவனவாக உள்ளன (Viswanathan, 2014). பாலை நிலங்களில் வாழும் மறவர், கள்வர் என்போர் பாலை நில வழிச்செல்வோரிடம் கொள்ளையடித்தல் பேசுதல் ஆகிய குற்றங்களை செய்பவர்களாகவும் மனப்பான்மை கொண்டவர்களாகவும் பாலைத் பாடல்களில் காட்டடப்படுகின்றனர்.

“வலி முன் பின் வல்ல ன்ற யாக்கை புலி நோக்கின்

கற்றவை வில்லர் கரிவளர் பித்தையர்

அற்றம் பார்த்து அல்கும் கடுங்கண் மறவர் தாம்

கொள்ளும் பொருள் இலர் ஆயினும் வம்பலர்

துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்து, உயிர் வெளவலின்

புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆரிடை”

மேற்காட்டிய அடிகள் வழி மறவர்களின் தோற்றத்தையும் கொடூரமான மனப்பாங்கையும் செயல்களையும் காணமுடிகிறது (Viswanathan, 2014). அவர்களைப் போலவே ஆறலை கள்வர்களும் பாலை நிலத்தின் வழிச்செல்வோரை வருத்திய செயல்களைப் பெருங்கடுங்கோ தன் பாடல்களில் பதிவு செய்துள்ளார். ஆறலைக் கள்வர் இரும்பைத் தலையிடத்தே கொண்ட தங்களின் கூர்மையை அறிய அவற்றின் நுனியை நகத்தால் நெருடும் தன்மை கொண்டவர் என்பதை,

“கள்வர்

பொன்புனை பகழி செப்பம் கொண்மார்

உகிர் நுதி புரட்டும் ஓசை போல” (Nagarajan, 2014)

காண்பார் அஞ்சும் மாலை சூடிய தலையினை உடையவர் ஆறலைக்கள்வர் என்பதை,

“பரியது உயிர்க்கும் அம்பினர் வெருவ
உவலை சூடிய தலையர்”

என்ற அடிகள் எடுத்துரைக்கின்றன (Jayapal, 2014). இவ்வாறு மனிதர்களை நோகச்செய்து பிழைப்பு நடத்துகின்ற மனிதர்களும் அக்காலத்தே இருந்துள்ளனர் என்பதைப் பெருங்கடுங்கோவின் பாலைத் திணைப்பாடல்கள் வழி காணமுடிகிறது.

## முடிவுரை

பண்பாடு என்பது மனிதனை மேம்படுத்தவல்ல தன்மைகளை உள்ளடக்கியது. பண்பாடுடைய சமுதாயமே மதிப்பும் அமைதியும் நலமும் மிக்கதாக விளங்கமுடியும். சங்ககால மக்கள் பண்பாட்டிற்கு அடிப்படையாக விளங்கும் சமுதாயத்திற்கேற்ற அறங்களை மதித்தும் செய்தும் உள்ளனர். விருந்தோம்புதல், ஈகைசெய்தல் ஆகிய செயல்களுக்குப் பண்டைத்தமிழர் பெரிதும் மதித்துப்போற்றியுள்ளனர். சங்ககாலத்தில் வாழ்ந்த ஆண்களும் பெண்களும் இல்லற, சமுதாயக்கடமைகளைச் செய்வதைப் பெரிதும் மதித்துள்ளனர். அறிவும் திறமையும் கொண்டவர்களைப் பெற்ற சமுதாயம் சிறந்தோங்க முடியும். அந்தணர்கள் தங்களுக்குரிய அறங்களைக்கடைப்பிடித்து கடமைகளை ஆற்றியுள்ளனர். அக்காலச் சமுதாயப் பண்பாட்டிற்கு இணக்கமில்லாத செயல்களைச் செய்யக்கூடிய முரண்பண்பாட்டு மனிதர்களும் இருந்துள்ளனர் என்பதையும் பெருங்கடுங்கோவின் பாடல்கள் காட்டி அமைகின்றன. எவ்வாறாயினும் பண்பாட்டுக்கூறுகளை மதித்துப் போற்றுகின்ற மக்களைக் கொண்ட சமுதாயமாகச் சங்ககாலச் சமுதாயம் விளங்கியுள்ளதைப் பெருங்கடுங்கோவின் பாடல்கள் உறுதிசெய்கின்றன.

## References


Balasubramanian, K, V. (2014) Natrinai, New Century House, Chennai, India.

Dakshinamurthy, A. (2019) Thamizhar Nagarigam panpaadum, Ainthinai Pathippagam, Chennai, India.

Jayapal, R. (2014) Natrinai, New Century House, Chennai, India.

Nagarajan, V. (2014) Natrinai, New Century House, Chennai, India.

Perumal, A. (2018) Thamizhaga Panpaadu, New Century Book House, Chennai, India.

Varatharasanar, M. (2014) Thirukkural, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Viswanathan, A. (2014) Kalittokai, New Century House, Chennai, India.



**Acknowledgement:** Author would like to thank the Management of Nallamuthu Gounder Mahalingam College, Pollachi for financial assistance through SEED money support.

**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2023. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License